## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

**முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,**
**மாவட்ட நீதிபதி**

**2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17–ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 மாசித் திங்கள் 05–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.24/2019 –இல்**
**வழக்கிடை விண்ணப்ப எண் 06/2025,**
**வழக்கிடை விண்ணப்ப எண் 07/2025,**
**வழக்கிடை விண்ணப்ப எண் 08/2025**

**01. ஜெயபால்**
**02. நீலாம்பாள்**
**03. சீரங்காயி (இறந்தார்)**
**04. பாப்பாத்தி**
**05. அலமேலு** ...**மனுதாரர்கள்/வாதிகள்**

**06. மாணிக்கம்**
**07. செல்வம்**
**08. மாலதி** ... **மனுதாரர்கள்/உத்தேச வாதிகள்**

**–எதிர்–**

**01. P. சின்னதம்பி (இறந்தார்)**
**02. மாரியம்மாள்**
**03. A. காளியப்பன்**
**04. கமலா**
**05. C. ராதா**
**06. சீனிவாசன்**
**07. P. உஷா** ...**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனுவில் மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு.S.மோகன்** அவர்கள் தோன்றினார். 03-ஆம், 04ம் எதிர்மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.பொன்.ரமணி** அவர்கள் தோன்றினார். 02-ஆம் எதிர்மனுதாரர் முதலேற்பு வழக்கிலே தோன்றாத் தரப்பினராகியுள்ளார். 05 முதல் 07 வரையிலான எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல்செய்யாத நிலையில் இந்த 3 மனுக்களும் இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது இரு தரப்பினரும் முன்வைத்த வாதங்களை கவனத்தில் வைத்தும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந்

III rd ADJ Court, Salem

நாள்வரை நிலுவையிலிருந்த இந்த மனுக்களில் இன்று இந் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கிறது.

## பொதுவான ஆணையுரை

### முகவுரை

வழக்கு விவாதத்திற்காக இருந்தபோது 09.02.2024-ஆம் தேதியன்று இறந்துபோன 03-ஆம் வாதி சீரங்காயியின் சட்டமுறை சார்பாற்றுனர்களை 06முதல் 08 வரையிலான வாதிகளாக வழக்கில் உரியநேரத்தில் சேர்க்காதத -தால் வழக்கு அற்றுப்போனதை இரத்துச் செய்வதற்கும் அவ்வாறு இரத்துச் செய்வதற்கு மனு தாக்கல்செய்வதில் விளைந்த 474 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கக் கோரியும் இறந்த சீரங்காயியின் சட்டமுறை சார்பாற்றுனர்களை 06முதல் 08வரையிலான பிரதிவாதிகளாக வழக்கில் சேர்க்கக் கோரியும் இம் மூன்று மனுக்களும் முறையே காலவரம்பீட்டுச் சட்டத்தின் 05-ஆம் பிரிவு, உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 22-ஆம் வகுமுறையின் 09-ஆம் விதி, 22-ஆம் வகுமுறையின் 04-ஆம் விதி ஆகிய வகையங்களின்கீழ் மனுதாரர்கள்/வாதிகளால் இம் மூன்று மனுக்களும் தாக்கல்செய்யப்பட்டுள்ளன.

### மனுக்களின் சுருக்கம்

01. மனுதாரர்கள் முதலேற்பு வழக்கில் வாதிகள் ஆவர். முதலேற்பு வழக்கு நிலுவையில் இருந்துவந்தபோது 09.02.2024-ஆம் தேதியன்று 03 ஆம் வாதி இறந்துவிட்டார். 03-ஆம் வாதிக்கு இந்த மனுவில் சொல்லப் பட்டுள்ள 06 முதல் 08 வரையிலான மனுதாரர்கள் மட்டுமே முதல்வகுப்பு வாரிசுகள்/சட்டமுறை சார்பாற்றுனர்கள் ஆவர். அவர்களை முதலேற்பு

III rd ADJ Court, Salem

வழக்கில் 06முதல் 08வரையிலான வாதிகளாக சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது.

**02.** 03-ஆம் வாதி இறந்ததும் உரிய காலத்திற்குள் அவரது சட்டமுறை சார்பாற்றுனர்களை வாதிகளாக சேர்ப்பதற்கு பல தவிர்க்க முடியாத காரணங்களால் மனுதாரர்கள் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. அதனால் 03-ஆம் வாதி மீதான வழக்கு அற்றுப்போனது. வழக்கு அற்றுப் போனதை இரத்துச் செய்வதற்கு உரிய காலத்தில் மனு தாக்கல்செய்ய முடியாமல் போனது. அவ்வாறு மனு தாக்கல்செய்வதற்கு 474 நாட்கள் காலதாமதம் ஆகிவிட்டது.

**03.** வழக்கு அற்றுப்போனதை இரத்துச் செய்வதற்கு உரிய விண்ணப்பம் தாக்கல்செய்வதில் விளைந்த 474 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து 03-ஆம் வாதியைப் பொறுத்து வழக்கு அற்றுப்போனதை இரத்துச்செய்து 03-ஆம் வாதியின் சட்டமுறை சார்பாற்றுனர்களை 06முதல் 08 வரையிலான வாதிகளாக வழக்கில் சேர்த்து ஆணையிட வேண்டும்.

III rd ADJ Court, Salem

## எதிருரைகளின் சுருக்கம்

**03–ஆம், 04–ஆம் எதிர்மனுதாரர்கள் மட்டுமே எதிருரை தாக்கல் செய்துள்ளனர். 05–ஆம், 06–ஆம், 07–ஆம் எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல்செய்யவில்லை. குறிப்பு 01–ஆம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டார். 02–ஆம் எதிர்மனுதாரர் முதலேற்பு வழக்கிலே தோன்றாத் தரப்பினராக உள்ளார்.**

## 03–ஆம், 04–ஆம் எதிர்மனுதாரர்கள் எதிருரையின் சுருக்கம்

**04.** 03-ஆம் வாதி இறந்தது மற்ற வாதிகளுக்கு உடனே தெரிந்து இருக்கும். அதேபோல் 03-ஆம் வாதியின் வாரிசுகள் குறித்தும் மற்ற

வாதிகளுக்கு உடனே தெரிந்திருக்கும். 03-ஆம் வாதியின் வாரிசுகளை உடனடியாக இந்த வழக்கில் சேர்த்து நடவடிக்கை எடுக்காமல் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற தீய நோக்கத்தில் 03-ஆம் வாதி இறந்த பிறகு 22 மாதங்கள் கழித்து மனுதாரர்கள் தாக்கல்செய்துள்ள இந்த மனுக்கள் ஏற்புடையதல்ல. காலதாமதத்திற்கு மனுதாரர்கள் மனுவில் சொல்லப் பட்டுள்ள காரணங்கள் ஏற்புடையதல்ல. ஆகையால், இந்த மனுக்களை தள்ளுபடிச்செய்ய வேண்டும்.

**தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்**

05. **இந்த மூன்று மனுக்களும் அனுமதிக்கத்தக்கதா?**

**தீர்முடிவு**

**06.** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. 03-ஆம் வாதி வழக்கு நிலுவையில் இருந்தபோது 09.02.2024-ஆம் தேதியன்று இறந்துவிட்டார் என்ற சங்கதியையும் அவருடைய முதல்வகுப்பு வாரிசுகள்/ சட்டமுறை சார்பாற்றுனர்கள்தான் 06முதல் 08வரையிலான மனுதாரர்கள் என்ற சங்கதியையும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மறுக்கவில்லை.

**07.** தரப்பினர் ஒருவர் இறந்துவிட்டால் வழக்கு அற்றுப்போகாமல் இருக்கவும் வழக்கு அற்றுப்போனால் அதை இரத்துச்செய்து மீண்டும் தொடங்கவும் இறந்தவரின் வாரிசுகளை சேர்ப்பது நுட்பமான நடைமுறை ஆகும். இந் நிலையில் இம் மூன்று மனுக்களையும் நிராகரிப்பதற்கான முகாந்திரம் இல்லை என்றே இந் நீதிமன்றம் கருதுகிறது.



III ADJ Court, Salem

08. அதேச் சமயத்தில் வாதி ஒருவர் இறந்துள்ள நிலையில் அவர் இறப்பு பற்றியோ அவரது வாரிசுகள் பற்றியோ மற்ற வாதிகளுக்கு உடனே தெரிந்திருக்கும். அவ்வாறு இருக்க உடனடியாக இறந்துபோன 03-ஆம் வாதியின் வாரிசுகளை இந்த வழக்கில் சேர்க்க நடவடிக்கை எடுக்காமல் 474 நாட்கள் காலதாமதமாக நடவடிக்கை எடுத்திருப்பது எதிர்மனுதாரர்களுக்கு காலதாமதத்தையும் இன்னலையும் ஏற்படுத்தும் என்பதை மறுக்க முடியாது. ஆகையால், செலவுத்தொகை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை விதித்து இம்மூன்று மனுக்களையும் அனுமதிப்பது உகந்தது என்று இந் நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதிமுடிவு**

09. இறுதியாக, மனுதாரர்/வாதி 03-ஆம்,04-ஆம் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு 02.03.2026-ஆம் நாளுக்குள் இம் மூன்று மனுக்களுக்கும் சேர்த்து மொத்தமாக 3000/-(**மூன்றாயிரம் மட்டும்**) உரூபாயை செலவுத்தொகையாக கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதிக்கப்படுகின்றன. தவறினால் இந்த மூன்று மனுக்களும் தள்ளுபடிச் செய்யப்படும். அடுத்த வழக்கெடுப்பு நாள் 02.03.2026.

**இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

PUGAZHENTHI V

Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.02.17 18:19:48 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,**

**சேலம்.**